# ஹம்பாந்தோட்டை பிரதேச சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜூன் 24 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங் களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் நிதிக் கூற்றுக்களுடன் காசு பாய்சல் கூற்று ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்பித்திருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) 2010 ஜனவரி மாதத்திற்கான ரூபா 599,518 இற்காக எழுத்தாணை கட்டணம் மற்றும் தண்டப்பணம் என்பன இரண்டு முறை குறிப்பிட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானம் அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முத்திரை கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப்பண பதிவேடுகளின் பிரகாரம் 2010 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 4,162,638 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதும்

எழுத்தாணை கட்டணம் மற்றும் தண்டப்பணக் கட்டணக் கணக்கில் அத்திகதியில் உள்ளவாறு மீதியென ரூபா 4,000,000 காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணமாகிய ரூபா 3,362,326 தொகையில் இருந்து ரூபா 599,518 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்கான முழுத்தொகையும் 2010 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது.இதன் பிரகாரம் எழுத்தாணைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப்பணக் கணக்கில் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,762,808 ஆக காணப்பட வேண்டும் எனினும் அத்திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 3,199,688 தொகை என ரூபா 436,880 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தென்மாகாண பிரதான செயலாளரின் 2011 ஏப்ரில் 08 திகதி முத்திரை கட்டணத் தொகையை அறிவிக்கும் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆண்டிற்கான முத்திரைக் கட்டணம் ரூ 1,624,950 தொகையென காட்டப்பட்டிருந்த போதும் 2010 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஏனைய வருமானங்கள் (முத்திரைக் கட்டணம்) கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 2,589,597 ஆகும். அத்தொகையில் ரூபா 1,454,097 தொகையொன்று 2010 ஆகஸ்ட் மாதத்தில் அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த கணக்கு 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,760,450 தொகை இருக்க வேண்டியிருந்த போதும் அத்திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,531,200 தொகையென ரூபா 229,250 தொகையொன்று குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பெருந்தெருக்கல் திணைக்களத்தில் மகநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2009 ஆண்டிற்கான வீதிகள் அபிவிருத்திக்கு 2010 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,541,202 தொகையொன்று மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 03 இன் கீழ் மூலதன உதவி என காட்டப்பட்டிருந்த ரூபா 14,937,343 தொகை உட்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் கணக்கு ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதான பேரேட்டில் கணக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட குறிப்புகள் பி.ச 13 மற்றும் 14 இன் பிரகாரம் பிழையற்றவை எனினும், வாக்குப்படி பேரேட்டுடன் இணைக்கஞ் செய்யும் போது 08 மாதங்களுக்கான பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் வித்தியாசங்கள் அவதானிக்ப்பட்டன.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த சொத்துக்கள் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ஆகிய ரூபா 2,028,655 தொகை மற்றும் சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த நடமாடும் நூலக பஸ் வண்டியின் பெறுமதியும், நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) 2010 திசெம்பர் மாதத்திற்கான 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் மற்றும் காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 42,772 தொகையினை மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை வங்கியின் பதவியணி கடன் தொடர்பான இலக்கம் 0002163905 நடைமுறைக் கணக்கில் 2010 திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 49,306 தொகை எனினும், ஐந்தொகையில் அத்திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 56,186 தொகை என ரூபா 6,880 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கங் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பிரதான பேரேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 9 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் துணைப் பதிவேடுகள் / பட்டோலைகளின் கூட்டுத்தொகையின் மீதிகளிடையே ரூபா 4,012,610 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கபட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,511,620 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்று இன்மை

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான 22 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ ஐயவினாக்களுடன் தொடர்பாக கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,858,600 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 26,877,361 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(இ) கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை

2010 ஆண்டிற்காக ரூபா 55,247 பெறுமதியான 05 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

1.3.6 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|

(அ) 1988 பிரதேச சபை

(நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | விதி 101 | செலவுகள் மேற்கொள்வதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட சபையின் பிரேரணை அங்கிகாரம் என்பன சில உறுதிச் சான்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 105 | கொடுப்பனவு பதிவேடுகளில் மேற்கொள்ளப்படும் பதிவுகளை அழிக்கும் போது சுருக்க கையெழுத்து இடுவதன் மூலம் மாற்றங்கள் சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (iii) | விதி 125 | வாக்குப்பண பேரேடு முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | விதி 150 | பீ. எஸ் 5 படிவத்தின் பிரகாரம் பொழிப்புக் காசேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | விதி 155 | பிரதான காசேட்டில் (பீ.எஸ் 10) நாளாந்த மீதியை காட்டக் கூடிய விதமாக அப்பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | விதி 164 | கணக்குகள் மற்றும் ஆவணங்களின் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பிழையற்றது என சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (vii) | விதி 193 | பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானத்துடன் இணக்கம செய்து முரண்களுக்கான காரணம் சமர்பித்திருக்கவில்லை. |
| (viii) | விதி 218 | சபைக்கு சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 387 | சபை நிதியக் கணக்கில் இருந்து 2010 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 432,471 இற்கான மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டிருந்தது. |
| (ii) | நி.பி.189 | ரூபா 1,216 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 396(ஈ) | ரூபா 39,023 இற்காக காலங்கடந்த 15 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,697,405 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 2,675,457 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ | ரூபா 000’ |
| வீத வரி மற்றும் வரி | 30 | 27 | 255 | 30 | 25 | 232 |
| வாடகை | 2,491 | 135 | 74 | 2,451 | 238 | 10 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 417 | 607 | 685 | 417 | 476 | 643 |
| ஏனைய வருமானங்கள் | 22,157 | 13,284 | 13,951 | 16,654 | 13,345 | 16,672 |

#### 2.2.2 வீதவரி அறவீடு செய்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 178,190 ஆகும்

(இ) வீதவரி செலுத்தும் 548 பேரில் 10 வருடத்திற்கு மிகையாக வரி செலுத்தத் தவறும் வரி செலுத்துவோர் 498 பேராகும்.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 3,199,688 தொகைக்காக தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 2,531,200 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.5 நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம்

2010 திசெமபர் 31 திகதியில் உள்ளவாறு 65 வர்த்தக முயற்சிகளில் இருந்து ரூபா 141,200 தொகையொன்று நிலுவையாக காணப்பட்டதுடன் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 152(4) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 கடைவாடகை

பெல்லகஸ்வெவ 12 கடைகளுக்கு ரூபா 59,400 தொகையும் சிறிபோபுர போகஹ சந்தி 02 கடைகளுக்காக ரூபா 14,425 தொகையும் ஆக ரூபா 73,825 தொகையொன்று 2010 திசெம்பர் 31 திகதிகளில் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டதுடன் பெல்லகஸ்வெவ கடைகளுக்காக முறையான மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 10,384 | 8,454 | 1,930 | 9,343 | 7,950 | 1,393 |
| ஏனையவை | 9,982 | 9,296 | 686 | 7,158 | 8,792 | (1,634) |
| உப கூட்டுத் தொகை | 20,366 | 17,750 | 2,616 | 16,501 | 16,742 | (241) |
| மூலதன செலவுகள் | 17,730 | 16,762 | 968 | 14,155 | 20,309 | (6,154) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 38,096 | 34,512 | 3,584 | 30,656 | 37,051 | (6,395) |

2.4 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 01 | - |
| இரண்டாரம் தரம் | 06 | 10 |
| ஆரம்ப தரம் | 13 | 14 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 14 |

2006 ஏப்ரல் 10 திகதி முகாமைத்துச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் முறையான அங்கீகாரம் ஒன்றினைப் பெறாமல், சபையினால் 14 ஊழியர்கள்(பிரதியீட்டு) சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தியருந்தனர்.

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,964,400 தொகையாக காணப்பட்டதுடன் 01 வருடகாலத்தை விஞ்சி காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 558,840 ஆகும்.

2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக்கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணி கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,869,517 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்திற்கு மிகையாக அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,650 ஆகும்.

2.5.3 செயற்படாத சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் செயற்படாமல் காணப்பட்டன.

(அ) ரூபா 500,000 பெறுமதியான 12.5 கே.வீ. டீசல் மின்பிறப்பாக்கி

(ஆ) பயன்படுத்த முடியாது காணப்பட்ட நீர் பவுசர்

(இ) ரூபா 200,000 தொகை பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம்

2.5.4 பொருட் பதிவேடுகள் பேணப்படாமை

சிசிலஸகம பொது நூலகத்திற்கு மற்றும் போஸத் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த 11 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

2.6 செயற்பாட்டுத்திறமையின்மை

(அ) நிதியத்தின் குறை பயன்பாடு

2010 ஆண்டு தொடர்பாக முன்பள்ளி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றில் இருந்து மீளாய்வாண்டின் போது நன்கொடையாக வழங்கியிருந்த ரூபா 200,000 தொகையொன்று உபகரணங்கள் கொள்வனவு செய்யாமல் காணப்பட்டது.

(ஆ) வெளியே எடுத்து செல்லப்பட்ட புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்காமை

சிசிலஸ்கம பொது நூலகத்தில் திருப்பி ஒப்படைக்காத நூலக புத்தகங்களின் பெறுமதி ஆகிய ரூபா 2,232 தொகையினை புத்தகங்கள் பெற்றவர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வாகனக் கட்டுப்பாடு

252-6542 கொண்ட டபள் கப் வண்டி தொடர்பான ஓட்ட அட்டவணைகளில் 2008 ஆண்டு முதல் 2010 செப்டம்பர் 07 திகதி வரை எரிபொருள் நுகர்வு பற்றிய மற்றும் மையிலோமீற்றரின் தரவுகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் சபைக்கு சொந்தமான 08 வாகனங்கள் தொடர்பாக சம்பவக குறிப்பேடு முறையற்ற விதமாக பேணப்பட்டிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) வீதி விளக்குகள் பராமரிப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(i) 2010 மே முதல் செப்டம்பர் வரை வீதி விளக்குகள் வழங்குதல் களஞ்சியப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை 1161 வீதி விளக்குகள் மின் தொழிநுட்பவியலாளரினால் புதிதாக பொருத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு

பொருத்தப்பட்டன என பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரின் மேற்பார்வை செய்யப்பட்டது என சான்றுபடுத்தியிருக்கவில்லை.

(iii) வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள தூண்களின் இலக்கம் மின் தொழிநுட்பவியலாளரினால் பேணப்பட்ட அறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) வீதி விளக்குகள் திருத்துவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் அதற்காக வழங்கப்பட்ட அங்கிகாரம் என்பன கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2010 செப்டம்பர் 08 ஆந் திகதி களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 98 வீதி விளக்குகள் குறைவு ஒன்று அவதானிக்கபட்டது.

(vi) அரச மயமற்ற அமைப்பு ஒன்றின் மூலம் 2010 யூலை மாதத்தில் வழங்கியிருந்த 46 சோலாபவர் வீதி விளக்குகளில் 13 வீதி விளக்குகள் 2010 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு வழங்கியிருந்த போதும் பெறுவனவு மற்றும் வழங்கல் களஞ்சியப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்